

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான, வசந்தம் க.கார்த்திகேயன் மைத்துனரும், அவரது தங்கையின் கணவருமான சி.அருண்குமார் அவர்களின் மறைவையொட்டி, அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு, முன்னாள் அமைச்சரும், விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக செயலாளருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. 11.08.2025 அன்று நேரில் சென்று மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தி, அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரத்தில் தாயுமானவர் திட்டத்தை துவக்கி வைத்து, முதியோர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், நகர கழக செயலாளர்கள் இரா.சக்கரை, S.வெற்றிவேல், நகர் மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றிய குழு பெருந்தலைவர் சச்சிதானந்தம், நகர இளைஞரணி அமைப்பாளர் செ.மணிகண்டன், நகர் மன்ற உறுப்பினர்கள் நவநீதம் மணிகண்டன், சாந்தராஜ், புருஷோத்தமன், 13வது வார்டு நிர்வாகிகள் வார்டு செயலாளர் ரவிச்சந்திரன், அன்பரசு, கபாலி, ரமேஷ், மோகன், செல்லதுரை, கோபி, அலெக்ஸ், கதிரவன் மற்றும் 13வது வார்டு நிர்வாகிகள் கமிட்டி மேஸ்திரி செல்லதுரை, பழனி, பிரதிநிதி காளிதாஸ், பாக்கியராஜ், மூர்த்தி, மோகன்,வேலு, கந்தன், மணிமாறன், ஜெயபிரகாஷ், மிசாமாறன், சிலம்பு ,கவின், ஸ்டாலின், நதேஷ்,ராஜ்கமல், தனசேகர், தீபக் மற்றும் பலர் இருந்தனர்.

### தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவராக மீண்டும் தேர்வு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து த.அமிர்தகுமார் வாழ்த்துப் பெற்றார்!

## அமைப்பின் கோரிக்கைகளுக்கு - முதல்வர் உறுதி!

சென்னை, ஆக.14-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவராக போட்டியின்றி இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட த.அமிர்த குமார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அதிகாரப்பூர்வமாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இச்சந்திப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ரத்து உள்ளிட்ட பல்வேறு நிலுவை கோரிக்கைகளை வழங்கியதுடன், விரைவில் அறிவித்திடவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

30.09.2025க்குள் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் ககன்தீப் சிங் பேடி தலைமையிலான குழுவின் அறிக்கையைப் பெற்று, விரைவில் நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தரவாதம் அளித்ததுடன், மீதி இருக்கின்ற நிலுவை கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதி அளித்தார்கள்.

மேனாள் மாநிலத்தலைவர் சிவ.இளங்கோ அவர்களுடைய திருஉருவச் சிலை அரசின் சார்பில் அமைக்கப்பட வேண்டும் எனவும்,அவர் பணிபுரிந்த அலுவலக வளாகத்திற்கு அவரது பெயரை சூட்டிட வேண்டும் உள்ளிட்ட அமைப்பு சார்பிலான கோரிக்கைகளுக்கான கடிதங்களையும் வழங்கி, ஏறக்குறைய 25 நிமிடங்கள் நிறைவாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

மீண்டும் மாநிலத்தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியில் எப்படியெல்லாம் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதோ, அதைப்போலவே எனது தலைமையிலான ஆட்சியிலும் உங்கள் தலைமையிலான சங்கத்திற்கு தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கப்படு(கிறது)ம் என தமிழ்நாடு முதலமைச்சராக தங்களுக்கு உறுதியளிப்பதாக கூறியதுடன், இரண்டாவது முறையாக போட்டியின்றி தேர்வான உங்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மீண்டும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதாக தெரிவித்தார்கள்.

இச்சந்திப்பில் மாநிலத் தலைவராகிய அமிர்தகுமார், மாநில துணைத் தலைவர்கள் ஆர்.சி.எஸ். குமார், அ.வெங்கடேசன், மாநிலப்பொருளாளர் திருமதி.வே.திரவியத்தம்மாள், மாநில தலைமை நிலையச் செயலாளர் மா. அதிகமான்முத்து, மாநிலச்செயலாளர் இரா.அருள்ராஜ், மாவட்டத் தலைவர்கள் வட சென்னை து.தேவராஜ், தென் சென்னை வா.பன்னீர்செல்வம், மேற்கு சென்னை எம். நித்தியானந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் முயற்சிக்குப் பாராட்டு: அடுத்த 3 ஆண்டுகளில் 6000 மெகாவாட்

# புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும்!

## மக்களவையில் மரு.கனிமொழி என்.வி.என்.சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி,ஆக.14-

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியில் தனியார் பங்களிப்பை அதிகப்படுத்தும் தமிழக அரசின் முயற்சிகளால் அடுத்த மூன்றாண்டுகளில் கூடுதலாக ஆறாயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் உற்பத்தியாகும் என ஒன்றிய மின்சாரத் துறை இணையமைச்சர் ஸ்ரீபாத் நாயக் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அதிகரித்து வரும் மின் தேவையை கணக்கில்கொண்டு கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்ய ஒன்றிய அரசு எடுத்த முயற்சிகள் என்ன? இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை முறையாகப் பயன்படுத்த கட்டமைப்பு வசதிகளை



மேம்படுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., மருத்துவர். கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்து ஒன்றிய மின்சாரத்துறை இணையமைச்சர் ஸ்ரீபாத் நாயக் தெரிவித்ததாவது:

தமிழகத்தின் தற்போதைய மின் உற்பத்தி திறன் 43,107 மெகாவாட்டாக இருக்கிறது. அடுத்த மூன்றாண்டுகளில் இதை அதிகப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, அடுத்த மூன்றாண்டுகளில் அனல் மின்நிலையங்கள் மூலம் கூடுதலாக 3440 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். அதே காலக்கட்டத்தில் அணுமின் நிலையங்கள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தில் தமிழகத்தின் பங்காக 2,152 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். அடுத்த மூன்றாண்டுகளில் புதுப்பிக்கத்தக்க மின்சாரம் மூலம் கூடுதலாக ஆறாயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும்.

இப்படி தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் மிகை மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பவும், அவசர காலத்தில் பிற மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு மின்சாரத்தை எடுத்து வரும் வகையிலும் மின் பாதைகள் மற்றும் அதற்கான இணைப்பு ஏற்பாடுகள் இதர தென் மாநிலங்களுடனும், மத்திய தொகுப்புடன் நல்ல முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி துறையில் குறிப்பாக புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியில் முதலீட்டை ஊக்கப்படுத்த ஒன்றிய அரசு பல்வேறு முயற்சி களை எடுத்து வருகிறது. இதற்காக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் திட்டங்களை வகுத்துள்ளது. இந்த விஷயத்தில் முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாநிலங்களுக்கிடையே மின்சாரத்தை எடுத்துச் செல்ல வசூலிக்கப்பட்டு வந்த கட்டணம் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தியை, மாநிலத்துக்குள்ளேயே பிற இடங்களுக்கும்; பிற மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்ல மின் தொடரமைப்பில் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வசதிகளை செய்து கொடுத்த பின்பு, மின் உற்பத்தியில் 100 சதவிகித அந்நிய முதலீட்டை சுலபமாக அனுமதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென சம்பந்தப்பட்ட அமைச்சகத்தில் தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை தங்கு தடையின்றி மேற்கொள்ள தேவையான துணை மின் நிலையங்கள், மின் தொடரமைப்பு கட்டமைப்புகளை உருவாக்க பசுமை எரிசக்திப் பாதைத் திட்டம் என்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் தமிழகத்தில் கடற்கரையில்லாத இடங்களில் 500 மெகாவாட் காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்ய தனித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர மின் உற்பத்தியில் தனியார் பங்களிப்பை ஊக்கப்படுத்த தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 100 கிலோவாட் முதல் 10 மெகாவாட் வரையிலான நீரேற்று மின் உற்பத்தி மற்றும் நீர் மின் நிலையங்களை அமைக்க தமிழ்நாடு அரசு தனிக் கொள்கைகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

மொத்தம் 13,500 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்று மின் திட்டங்களை தமிழ்நாடு அரசு தனியார் மற்றும் அரசின் பங்களிப்போடு செயல்படுத்தி வருகிறது. இதை மேலும் அதிகப்படுத்த தகுதியான தனியார் நிறுவனங்களை யும் தமிழ்நாடு அரசு அடையாளம் கண்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் ஸ்ரீபாத் நாயக் பதிலளித்தார்.

### தமிழ்நாட்டில் உள்ள

# துறைமுகங்களை, சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் திட்டம் உள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14-

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள தி.மு.க. எம்.பி. இரா. கிரிராஜன், தமிழ்நாட்டில் உள்ள சென்னை, எண்ணூர், தூத்துக்குடி துறைமுகங்களை, பல்வேறு வெளிநாடுகளில் உள்ள துறைமுகங்களுடன் இணைப்பை ஏற்படுத்தும் திட்டத்தை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளதா? இந்த மூன்று துறைமுகங்களிலிருந்து ஈட்டப்பட்ட மொத்த வருமானம் மற்றும் விரிவாக்கம், மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிதி எவ்வளவு? எண்ணூர் காம



ராஜர் மற்றும் கடலூர் துறைமுகங்கள் சாகர் மாலா திட்டத்தின் கீழ் உள்ளதா என்ற கேள்விகளை துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, நீர்வழிகள் துறை அமைச்சரிடம் எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் அளித்துள்ள அமைச்சர் சர்பானந்தா சோனோவால், சென்னை துறைமுகம், எண்ணூர் காமராஜர் துறைமுகம், தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம் ஆகியவற்றுக்கு இடையே பல்வேறு வெளிநாட்டு துறைமுகங்களுடன் இணைப்பை அரசாங்கம் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சென்னை துறைமுகம் ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா ஆகியவற்றின் முக்கிய துறைமுகங்களுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது என்றும், ஆசியா, ஐரோப்பா, அமெரிக்காவிலிருந்து வழக்கமான சரக்குப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது என்றும் பதில் கூறப்பட்டுள்ளது. மேலும், வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் ரஷ்யா, தாய்லாந்து, வங்காளதேசத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளதாகவும் அமைச்சரின் பதிலில் கூறப்பட்டுள்ளது.

எண்ணூர் காமராஜர் துறைமுகத்தைப் பொறுத்தவரை ஆஸ்திரேலியா, சீனா, சிங்கப்பூர், மலேசியா, கொழும்பு, மத்திய கிழக்கு, தென்னாப்பிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச துறைமுகங்களுடன் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக தொடர்புகளை மேற்கொண்டு வருவதாகவும் பதிலில் கூறப்பட்டுள்ளது.


தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்திலி ருந்து இலங்கையின் கொழும்பு, மாலே, ஐக்கிய அரபு அமீரகம், வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், சீனா, இந்தோனேசியா, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, எகிப்து, ரஷ்யா, மொராக்கோ உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டு துறை முகங்களுடன் வழக்கமான போக்குவரத்து இணைப்பை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சென்னை துறை முகத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 6463.24 கோடியாகவும், மூலதனச் செலவினம் ரூ. 306.9 கோடியாகவும் உள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல எண்ணூர் துறைமுகத்திலிருந்து ரூ. 4654.46 கோடி, தூத்துக்குடி துறைமுகத்தி லிருந்து ரூ. 4362.22 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும், மூலதனச், செலவினமாக முறையே ரூ. 1898.3 கோடியும், ரூ. 1127.8 கோடியும் செலவிடப்பட்டுள்ளதாக, திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு, ஒன்றிய அமைச்சர் பதில் கூறியுள்ளார்.

இந்தியாவின் துறைமுகங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி அமைப்பதை நோக்கமாகக் கொண்ட “கடல் மாலைத் திட்டம்” என்கிற “சாகர் மாலா திட்டத்தின்” கீழ் சென்னை, எண்ணூர், கடலூர் துறைமுகங்களின் ஆறு திட்டங்களுக்கு மொத்தமாக ரூ. 463.80 கோடி நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதில் ரூ. 233.62 கோடி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசின் அமைச்சரின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.தட்சிணாமூர்த்தி
### ஆகஸ்ட் 14 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு 1968ஆம் ஆண்டு உறுப்பினராகி பணியாற்றியவர்.

சீரணி தொண்டராக பணியாற்ற தொடங்கி, தொண்டர் படையிலும், பின்னர் எழும்பூர் பகுதி பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் சேமிப்பு கடனுதவி சங்க இயக்குராக இருந்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

**சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் **விழுப்புரம் மத்திய,** மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

தலைவர் - எஸ். தாகீர் 26, ஏரிக்கரை தெரு, ஆர்.ஆர். நகர், விழுப்புரம்.

துணைத் தலைவர் - பி. தோமினிக் 21/1, சேவியர் தெரு, விழுப்புரம்.

அமைப்பாளர் - டி.என்.ஏ. தமின் 2, பாண்டி - விழுப்புரம் மெயின் ரோடு, நவமால்காப்பேர், தென்னல் அஞ்சல், கண்டமங்கலம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.ஆர்.எஸ். அசாருதீன் 49, வ.உ.சி. தெரு, விழுப்புரம். 2) அ. அன்வர்பாஷா 4, குத்துவாபு தெரு, கோட்டக்குப்பம், வானூர் வட்டம், விழுப்புரம். 3) நா. ஹென்றிதாஸ் 456, அன்னை இந்திரா நகர், திருச்சிற்றம்பலம் கூட்ரோடு, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) எஸ்.கே.எஸ். முகமது அலி 38/14, கைவல்லியர் தெரு, விழுப்புரம். 5) எஸ். லூக்காஸ் செங்காடு கிராமம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்,
**தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னகேசவன்
### ஆகஸ்ட் 14 (1984)



தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.

“தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**